සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමු වාර ඇගයීම
முதலாம் தவணை மதிப்பீடு - 2018
First Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 08 | විෂයය / பாடம் / Subject | சைவநெறி | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | පැය / மணித்தியாலம் / Hours | 2 |
|---|---|---|---|---|---|---|---|

# பகுதி - I
## எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1. மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. சுவேதகேது - உத்தாலகர் கதை கூறும் உபநிடதம்
   (1) கட உபநிடதம் (2) சாந்தோக்கிய உபநிடதம்
   (3) கேன உபநிடதம் (4) பிருகதாரணிய உபநிடதம்

2. கோபுரத்தின் மறுபெயர்
   (1) தூலலிங்கம் (2) பத்திரலிங்கம்
   (3) சூக்குமலிங்கம் (4) சிவலிங்கம்

3. மாதம் ஒருமுறை நிகழும் நைமித்தியக் கிரியை
   (1) சுக்கிரவாரம் (2) பிரதோஷம்
   (3) சஷ்டி (4) நவராத்திரி

4. சிவ விரதங்களுள் ஒன்று
   (1) கந்தசஷ்டி (2) நவராத்திரி (3) சிவராத்திரி (4) வரலட்சுமி

5. "ஈதல் அறம்" என்று கூறியவர்
   (1) வள்ளுவர் (2) விவேகானந்தர் (3) சம்பந்தர் (4) ஔவையார்

6. ஐம்பொறிகளாவன
   (1) மெய், வாய், கண், மூக்கு, செவி
   (2) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
   (3) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
   (4) படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்

7. பிரதிபலனை எதிர்பாராது செய்யப்படும் கிரியை
   (1) நித்தியக் கிரியை (2) நைமித்தியக் கிரியை
   (3) காமியக் கிரியை (4) நிஷ்காமியக் கிரியை

8. கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் தலம்
   (1) திருமருகல் (2) சிதம்பரம் (3) திருக்கழுமலம் (4) திருமறைக்காடு

9. ஆலய அமைப்பில் மனித சிரசை குறிப்பதாக அமைவது.
   (1) இராஜகோபுரம் (2) மகாமண்டபம் (3) கருவறை (4) தரிசன மண்டபம்

10. திருமறைக் காட்டில் கதவு திறக்கப் பாடியவர்
    (1) சம்பந்தர் (2) அப்பர் (3) சுந்தரர் (4) மாணிக்கவாசகர்

(10 புள்ளிகள்)

2. **தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. நித்தியக்கிரியை | பஞ்சகிருத்தியம் |
| 2. இராஜகோபுரம் | சம்பந்தர் |
| 3. ஐந்தொழில்கள் | பாதங்கள் |
| 4. அடிமுடிதேடியமை | அர்த்தசாமம் |
| 5. திருக்கழுமலம் | சிவராத்திரி |

(5 புள்ளிகள்)

3. **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

1. இறைவனை வழிபட மனக்கட்டுப்பாடு தேவை. ( )
2. நித்தியக் கிரியைகளில் ஒன்று மகோற்சவம் ஆகும். ( )
3. கடவுள் நாம் செய்யும் பாவங்களை நீக்கமாட்டார். ( )
4. முதியவர்களின் அனுபவம், அறிவு, அன்பு என்பன என்றும் எமக்குத் துணை செய்யும். ( )
5. விசேட காரணத்தின் பொருட்டு நடைபெறுபவை நித்தியக் கிரியைகள் எனப்படும். ( )

( 10 புள்ளிகள்)

4. **பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**
**(கடவுளிடம், பலிபீடத்தை, பேசுதல், ஆலயங்கள், மதித்து)**

1. கண்ணுக்குப் புலப்படாத ..................................... இருந்து இந்த உலகம் தோன்றுகின்றது.
2. இறைவழிபாட்டைக் கிரியைகளின் அடிப்படையில் மேற்கொள்ள ........................... அவசியமானவை.
3. கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் முதலில் .................................... வணங்க வேண்டும்.
4. ஆலயத்தில் வீண்வார்த்தை .......................................... குற்றமாகும்.
5. நாம் மனித உரிமைகளை ........................................... நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

(5 புள்ளிகள்)

5. **பொருத்தமான விடைகளை இடைவெளிகளில் எழுதுக.**

1. நீரில் .................................. கரைந்து பரந்திருப்பது போல ................................ எங்கும் பரந்திருக்கின்றார்.
2. கோபுரத்தில் அமைந்துள்ள .................................... இறைவனின் ............................. சுட்டுகின்றன.
3. விநாயகரை வணங்கும் போது சிரசில் ....................................... குட்டியும் மூன்று முறை .................................. போட்டும் வணங்க வேண்டும்.
4. ஒவ்வொருவரும் மற்றவர்களது உரிமைகளை மதிக்கும் போது .............................. பிறக்கும் ................................... நிலவும்.
5. இறைவன் அடியார்க்கு ........................................ அடியார்களின் தூய விருப்பங்களை ...........................................

(5 × 2 = 10 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம் இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

(1) கடவுளின் இயல்புகள் இரண்டு எழுதுக.

(2) ஐந்து அங்கங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்கும் நமஸ்காரம் எது?

(3) ஆலயம் என்பதன் பொருள் யாது?

(4) ஆறுகாலப் பூசைகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

(5) வேத கால மக்கள் வழிபட்ட இயற்கைச் சக்திகள் இரண்டு தருக.

(5 × 2 = 10 புள்ளிகள்)

**2. பின்வரும் தேவாரங்களுள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக.**

(1) கைப்போது மலர்தூவி......

(2) மண்ணில் நல்ல வண்ணம்....

(3) பெருகலாம் தவம்.....

(4) கற்றாங்கு எரியோம்பிக்...

(2 × 5 = 10 புள்ளிகள்)

3. ‘ ஆலயம் தொழுவது சாலவும் நன்று

(1) கடவுள் என்பதன் பொருள் யாது?

(2) நாம் ஆலயத்திற்கு எவ்வாறு செல்ல வேண்டும்?

(3) ஆலயத்தில் செய்யத்தகாத செயல்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)

**4.** கிரியைகளைப் பக்தி சிரத்தையுடன் செய்தல் சிறப்பாகும்.

(1) ஆலயத்தில் நடைபெறுகின்ற கிரியைகளை வகைப்படுத்துக.

(2) வருடம் ஒரு முறை நிகழும் நைமித்தியக் கிரியைகள் மூன்று எழுதுக.

(3) நித்திய, நைமித்தியக் கிரியைகளில் பயன் கருதிச் செய்யும் வழிபாடுகள் நான்கினைத் தருக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

5. ‘ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் ’’

(1) வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் மூன்று தருக.

(2) மனக்கட்டுப்பாட்டை வளர்க்கக்கூடிய சாதனங்கள் எவை?

(3) கொடையின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டிய சான்றோர் நால்வரைக் குறிப்பிடுக.

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

6. விரதம் அனுட்டித்து இறையருள் பெறுவோம்.

(1) மகா சிவராத்திரி விரதம் அனுட்டிக்கும் காலம் எது ?

(2) சிவராத்திரி விரதம் பற்றிக் கூறும் நூல்கள் இரண்டு எழுதுக

(3) சிவராத்திரி பற்றிய புராணக்கதையை விளக்குக

(2 + 4 +4 =10 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் இரண்டினைத் தெரிவு செய்து ஒவ்வொரு தலைப்பின் கீழும் ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

(1) ஆலய வழிபாடு

(2) திருஞானசம்பந்தர்

(3) சிவராத்திரி

(4) முதியோரைக் கனம் பண்ணுதல்.

(2 × 5 = 10 புள்ளிகள்)